[1975 மார்ச் 15

மாண்புமிகு திரு. ஓ. பி. இராமன் : தலைவரவர்களே, (அ) அண்டு (இ) 1973–74-ம் ஆண்டு கன்னியாகுமரி மாவட்டத்தில் 2 ஹெக்டேர் பரப்பளவில் வளர்க்கப்பட்டிருக்கிறது.

திரு. என். டென்னிஸ் : தலைவரவர்களே, இதைப் பயிரிடுவதற்கு இன்னும் அதிக விஸ்தீரணம் உள்ள இடம் இருக்கிறது. பேப்பர் விலை இப்பொழுது அதிகமாக இருக்கிறது. பேப்பர் இன்டஸ்ட்ரிசுக்கு வழி வகுக்கக் கூடியதாக இருக்கும். ஆகவே, ஒரு சிறப்புத் திட்டத்தின் மூலமாக இந்தப் பயிரை அதிகமாகப் பயிரிடுவதற்கு வழிவகுக்குமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ஓ. பி. இராமன் : தலைவரவர்களே, கன்னியா குமரி மாவட்டத்திலே படிப்படியாக இத்திட்டத்தின்கீழ் பேச்சிப்பாறை, பெருஞ்சாணிக்கரைகளிலும் ரப்பர் தோட்டங்களின் கீழும் அதிக அளவில் வைக்க செயற்குறிப்பு உள்ளது.

Board for administration of temples.

*337 Q.—Thirumathi T. N. ANANDANAYAKI: Will the Hon. the Minister for Religious Endowments be pleased to state:—

(*a*) whether the Coimbatore District Conference of Hindu Temples Protection Committee held at the end of January 1974 requested the Government to constitute an autonomous Board for Hindu Temples, and

(*b*) if so, the action taken by the Government thereon?

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன் :

(அ) ஆம்.

(இ) இக்கருத்து அரசால் ஏற்கனவே பரிசீலிக்கப்பட்டு, ஏற்றுக் கொள்ளப்படவில்லை.

புதியம்புத்தூர் கோவில்.

*338 வினா—திரு. பெ.சௌந்தரபாண்டியன் }
திரு. எம். முத்தையா } மாண்புமிகு அறநிலையத்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) 1974 ஆகஸ்ட் மாதத்தில் தூத்துக்குடி அருகிலுள்ள புதியம் புத்தூர் கோவிலில் உள்ள சிலை திருட்டுப்போய்விட்டது என்பது உண்மையா ?

(இ) ஆம் எனில், அதன் விபரம் என்ன ?